பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

10 12 2024 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உயர்தரமான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சமக்ரா சிக்ஷா திட்டத்தில் நடப்பு நிதி ஆண்டில் தமிழகத்துக்கு 2 ஆயிரத்து 151 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய கல்வித்துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

3. சிங்காரச் சென்னை இரண்டாம் கட்டத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் 901 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் அங்கன்வாடி மையங்களில் காலியாகவுள்ள 18 ஆயிரம் பணியிடங்களை நிரப்ப மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

5. ஆசிய கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா, மலேசியாவை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உயர்தரமான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நொய்டா விமான நிலையம் தொடர்பாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு வெளியிட்ட பதிவைப் பகிர்ந்து பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து இணைப்பை மேலும் வலுப்படுத்தி மக்களின் வசதியை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

சமக்ரா சிக்ஷா திட்டத்தில் நடப்பு நிதி ஆண்டில் தமிழகத்துக்கு 2 ஆயிரத்து 151 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய கல்வித் துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு எழுத்துப் பூர்வமாக அவர் அளித்துள்ள பதிலில் இந்த திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து தமிழகத்தில் பல லட்சம் மாணவர்கள் பயன் அடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அதே சமயம் பிரதமரின் ஸ்ரீ திட்டத்தில் தமிழகம் இதுவரை இணையவில்லை என அவர் தெரிவித்தார்.

இதுவரை 33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இத்திட்டம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன என்று அவர் கூறினார்.

பிரதமரின் ஸ்ரீ திட்டம் முன்மாதிரி பள்ளிகளை உருவாக்கும் திட்டம் என திரு. ஜெயந்த் சௌத்ரி கூறினார்.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எவ்வித மாற்றங்களும் இன்றி கையெழுத்திடுமாறு தமிழக அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில், எந்த பாகுபாடும் இன்றி அனைவருக்கும் அனைத்து உரிமைகளும் கிடைக்கும் வகையில் மாநில அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருவதாகக் கூறியுள்ளார்.

அடிப்படை உரிமைகளை நிலை நாட்ட இந்த மனித உரிமை நாளில் அனைவரும் உறுதியேற்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<>>>

சிங்காரச் சென்னை இரண்டாம் கட்டத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் 901 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற 17 திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, 493 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய அவர், சென்னை நகரை மேம்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, கடல்நீரை குடிநீராக்கும் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு. கே.என். நேரு தெரிவித்தார்.

<<<>>>

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் சேதுராமனுடன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் மூன்றாவது பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

<<<>>>

தமிழகத்தில் அங்கன்வாடி மையங்களில் காலியாகவுள்ள 18 ஆயிரம் பணியிடங்களை நிரப்ப மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கல்வி ஆண்டு தொடங்கி ஆறு மாதங்கள் ஆகியும், தமிழகம் முழுவதும் உள்ள அங்கன்வாடி பள்ளிக் குழந்தைகளுக்கான

சீருடைகளும், பயிற்சிப் புத்தகங்களும் இன்னும் வழங்கப்படவில்லை என்று  தகவல் வெளியாகி வருவதாக கூறியுள்ளார்.

இது குழந்தைகளின் கற்றல் திறனையும் பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பணியாற்றும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களை அரசுப் பணியாளர்களாகப் பணியமர்த்தி காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று திமுக வாக்குறுதி அளித்திருந்ததாக அவர் கூறியுள்ளார்.

ஆனால் ஆட்சிக்கு வந்து 44 மாதங்கள் ஆகியும் அது நிறைவேற்றப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலி பணியிடங்களை நிரப்பாமல், ஊழியர்கள் மீது பணிச் சுமையை மாநில அரசு திணிப்பதாக திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>

சென்னை செம்மொழிப் பூங்காவில் நடைபெற உள்ள மலர்க் கண்காட்சிக்காக உதகையில் இருந்து மலர்ச்செடிகளை அனுப்பும் பணி நேற்று தொடங்கியது.

உதகையில் இருந்து மட்டும் 6 லட்சம் மலர்ச்செடிகள் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி மேற்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து சற்று வலுவடையக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக 13ஆம் தேதி வரை தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் பிற பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தென்கொரிய அதிபர் திரு யூன் சுக் இயோலுக்கு எதிராக வழக்கு விசாரணை நடைபெற்று வரும் நிலையில் அவர் வெளிநாடுகளுக்குச் செல்ல அந்நாட்டு நீதித்துறை தடை விதித்துள்ளது.

-----------

இயற்கை எரிவாயு உற்பத்தியை 2030-ம் ஆண்டுக்குள் 15 சதவீதம் அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

-----------

சிறுதானிய அடிப்படையிலான உணவுப் பொருட்களை ஊக்குவிக்க உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகைத் திட்டத்தின் கீழ் 800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய உணவு பதப்படுத்தும் தொழில்கள் துறை இணையமைச்சர் திரு ரவ்நீத் சிங் பிட்டு தெரிவித்துள்ளார்.

-----------

நாடு முழுவதும் நடப்பு ரபி பருவத்தில் பயிர் விதைப்பு 493 லட்சம் ஹெக்டேரைத் தாண்டியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

-----------

பிலிப்பைன்ஸ் கடலோர காவல்படையுடன் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்த கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

-----------

திருவண்ணாமலையில் மாவட்ட ஆட்சியர் திரு பாஸ்கரபாண்டியன் தலைமையில் திருநங்கைகளுக்கான சிறப்பு குறை தீர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.

-----------

ராமநாதபுரத்தில் வரும் 13-ம் தேதி தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு சிம்ரன்ஜித் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

-----------

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிதியுதவியை மாவட்ட ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் வழங்கினார்.

-----------

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் கார்த்திகை சோமவாரத்தை ஒட்டி லட்சதீப திருவிழா நேற்று நடைபெற்றது.

-----------

சென்னையில் வரும் 12-ம் தேதி தொடங்கவுள்ள 22-வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவுக்கு, தமிழக அரசின் நித உதவியாக 85 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், இந்திய திரைப்பட திறனாய்வுக் கழக நிர்வாகிகளிடம் வழங்கினார்.

-----------

சென்னை புத்தகக் கண்காட்சி நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் வரும் 27-ம் தேதி தொடங்கி ஜனவரி 12-ம் தேதி வரை நடைபெறும் என தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் அறிவித்துள்ளது.

-----------

*விளையாட்டுச் செய்தி*

ஆசிய கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா, மலேசியாவை வென்றது.

மஸ்கட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் இந்தியா 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா — சீனாவை எதிர்கொள்கிறது.

<<<<>>>>